தினமணி

## கூடலூரில் கோடை விழா துவக்கம்

First Published : 07 May 2012 11:03:51 AM IST

கூடலூர், மே 6: கூடலூர் கோடை விழா 2012 மற்றும் வாசனை திரவியக் கண்காட்சியை, மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் ஞாயிற்றுக்கிழமை துவக்கி வைத்தார்.

முன்னதாக, ராஜகோபாலபுரம் பகுதியில் கோடை விழா பேரணியை ஆட்சியர் துவக்கி வைத்து தலைமை வகித்தார். முக்கிய சாலைகள் வழியாக புனித தாமஸ் மேல்நிலைப் பள்ளி மைதானத்தை பேரணி வந்தடைந்தவுடன், தோட்டக்கலைத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாசனை திரவியக் கண்காட்சியைத் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இதைத்தொடர்ந்து, ஆவின், வனத்துறை, சாலிஸ்பரி கூட்டுறவுத் தேயிலை, தொண்டு நிறுவனங்கள் உட்பட பல்வேறு துறைகள், பொதுநல அமைப்புகள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை பார்வையிட்டனர்.

துவக்க விழாவில், கூடலூர் கோட்டாட்சியர் வீ.ஆதிமூலம், வட்டாட்சியர் பழனிக்குமார், சுற்றுலா அலுவலர் எஸ்.துரைராஜ், தோட்டக்கலை துணை இயக்குநர் ஜெகதீஷ்குமார், உதவி இயக்குநர் குணசேகரன், கிடங்கு மேலாளர் தம்பிராமசாமி, தோட்டக்கலை அலுவலர்கள் சுரேஷ்ராஜன், ஜெயலட்சுமி, கூடலூர் நகர்மன்றத் தலைவர் ஜி.ரமா, துணைத் தலைவர் ஜீ.ராஜா தங்கவேலு, நகர்மன்ற உறுப்பினர்கள் ஜே.ராமசாமி, ஆர்.தாமஸ், சிவானந்தராஜா, தினேஷ் உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**காய்கறிக் கண்காட்சி நிறைவு நாளில் மக்கள் கூட்டம்**

First Published : 07 May 2012 11:03:25 AM IST

கோத்தகிரி, மே 6: கோத்தகிரியில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற 5-வது காய்கறிக் கண்காட்சி மற்றும் கோடை விழாவின் நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமை சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது.

நடப்பாண்டு கோடை சீசனில் முதல் நிகழ்ச்சியாக துவக்கப்பட்ட கோடை விழா மற்றும் 5-வது காய்கறிக் கண்காட்சி நேரு பூங்காவில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைக சிறப்பாக நடைபெற்றது. இதில் நீலகிரி, தர்மபுரி, விழுப்புரம், திருச்சி, ஈரோடு, திருப்பூர், கோவை, தேனி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல் உள்ளிட்ட 10 மாவட்டங்களைச் சேர்ந்த தோட்டக்கலைத் துறையினர் கலந்துகொண்டனர்.

மேலும், கோத்தகிரியில் உள்ள ஐலண்ட் அறக்கட்டளை, "கீஸ்டோன்' பவுண்டேசன் ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் கண்காட்சியில் கலந்துகொண்டு, குடில்கள் அமைத்து காய்கறிகளால் சிற்பங்கள் அமைத்து கண்காட்சியை சிறப்பித்தனர்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள், நாட்டியம், மேஜிக் ஷோ, பாட்டுக் கச்சேரி உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை மாலை பரிசளிப்பு விழாவுடன் நிறைவு பெற்றது.

நிறைவு விழாவுக்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் சீனிவாசரெட்டி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசியது:

காய்கறிக் கண்காட்சியில் கலந்துகொண்டதற்காக, மிகவும் பெருமைப் படுகிறேன். காய்கறிகளில் இத்தனை வகை உண்டு என்பதை இங்குதான் பார்க்கிறேன். அதுமட்டுமல்லாமல், இவ்வளவு மக்கள் கூட்டத்தையும் இங்குதான் பார்க்கிறேன். ஒரு கண்காட்சிக்கு இவ்வளவு மக்கள் கூட்டம் வரும் என நான் எதிர்பார்க்கவில்லை.

இக்கண்காட்சி நீலகிரி மாவட்டத்துக்கு ஒரு முன்னுதாரணமாக உள்ளது. இதேபோல, இந்த வட்டத்தில் தொடர்ந்து நடைபெறவுள்ள மற்ற கண்காட்சிகளிலும் மக்கள் கலந்துகொள்ள வேண்டும்.

அடுத்த ஆண்டு நடக்கும் காய்கறிக் கண்காட்சியில் வைக்கப்படும் காய்கறிகளில் என்னென்ன மூலிகை, மருந்து வகைகள் உள்ளது என்ற பட்டியலையும் சேர்த்து

வைக்க வேண்டும் என, தோட்டக்கலைத் துறைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், காய்கறிக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்த தோட்டக்கலைத் துறைக்கு பாராட்டு தெரிவித்தார்.

பேரூராட்சித் தலைவர் சை.வாப்பு, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மனோகரன், மாவட்ட கவுன்சிலர் போஜன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். கண்காட்சியில் குடில்கள், பூங்காக்கள், காய்கறிகளால் சிறந்த சிற்பம் அமைத்தவர்கள், மற்றும் கண்காட்சியில் கலந்துகொண்ட 10 மாவட்டங்களைச் சேர்ந்த தோட்டக்கலைத் துறையினருக்கு கேடயங்கள் வழங்கப்பட்டன.

கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்ற இக்கண்காட்சியில் உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் என 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளதாக தெரிவித்தனர்.

முன்னதாக, தோட்டக்கலை இணை இயக்குநர் மோகன் வரவேற்றார். துணை இயக்குநர் மணி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். கோத்தகிரி உதவி இயக்குநர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

---

## காய்கறிக் கண்காட்சி நிறைவு நாளில் மக்கள் கூட்டம்

First Published : 07 May 2012 11:03:25 AM IST

கோத்தகிரி, மே 6: கோத்தகிரியில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற 5-வது காய்கறிக் கண்காட்சி மற்றும் கோடை விழாவின் நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமை சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது.

நடப்பாண்டு கோடை சீசனில் முதல் நிகழ்ச்சியாக துவக்கப்பட்ட கோடை விழா மற்றும் 5-வது காய்கறிக் கண்காட்சி நேரு பூங்காவில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைக சிறப்பாக நடைபெற்றது. இதில் நீலகிரி, தர்மபுரி, விழுப்புரம், திருச்சி, ஈரோடு, திருப்பூர், கோவை, தேனி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல் உள்ளிட்ட 10 மாவட்டங்களைச் சேர்ந்த தோட்டக்கலைத் துறையினர் கலந்துகொண்டனர்.

மேலும், கோத்தகிரியில் உள்ள ஐலண்ட் அறக்கட்டளை, "கீஸ்டோன்' பவுண்டேசன் ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் கண்காட்சியில் கலந்துகொண்டு, குடில்கள் அமைத்து காய்கறிகளால் சிற்பங்கள் அமைத்து கண்காட்சியை சிறப்பித்தனர்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள், நாட்டியம், மேஜிக் ஷோ, பாட்டுக் கச்சேரி உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை மாலை பரிசளிப்பு விழாவுடன் நிறைவு பெற்றது.

நிறைவு விழாவுக்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் சீனிவாசரெட்டி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசியது:

காய்கறிக் கண்காட்சியில் கலந்துகொண்டதற்காக, மிகவும் பெருமைப் படுகிறேன். காய்கறிகளில் இத்தனை வகை உண்டு என்பதை இங்குதான் பார்க்கிறேன். அதுமட்டுமல்லாமல், இவ்வளவு மக்கள் கூட்டத்தையும் இங்குதான் பார்க்கிறேன். ஒரு கண்காட்சிக்கு இவ்வளவு மக்கள் கூட்டம் வரும் என நான் எதிர்பார்க்கவில்லை.

இக்கண்காட்சி நீலகிரி மாவட்டத்துக்கு ஒரு முன்னுதாரணமாக உள்ளது. இதேபோல, இந்த வட்டத்தில் தொடர்ந்து நடைபெறவுள்ள மற்ற கண்காட்சிகளிலும் மக்கள் கலந்துகொள்ள வேண்டும்.

அடுத்த ஆண்டு நடக்கும் காய்கறிக் கண்காட்சியில் வைக்கப்படும் காய்கறிகளில் என்னென்ன மூலிகை, மருந்து வகைகள் உள்ளது என்ற பட்டியலையும் சேர்த்து வைக்க வேண்டும் என, தோட்டக்கலைத் துறைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், காய்கறிக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்த தோட்டக்கலைத் துறைக்கு பாராட்டு தெரிவித்தார்.

பேரூராட்சித் தலைவர் சை.வாப்பு, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மனோகரன், மாவட்ட கவுன்சிலர் போஜன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். கண்காட்சியில் குடில்கள், பூங்காக்கள், காய்கறிகளால் சிறந்த சிற்பம் அமைத்தவர்கள், மற்றும் கண்காட்சியில் கலந்துகொண்ட 10 மாவட்டங்களைச் சேர்ந்த தோட்டக்கலைத் துறையினருக்கு கேடயங்கள் வழங்கப்பட்டன.

கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்ற இக்கண்காட்சியில் உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் என 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளதாக தெரிவித்தனர்.

முன்னதாக, தோட்டக்கலை இணை இயக்குநர் மோகன் வரவேற்றார். துணை இயக்குநர் மணி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். கோத்தகிரி உதவி இயக்குநர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

---

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 78.74அடி

First Published : 06 May 2012 12:43:01 PM IST

தஞ்சாவூர், மே 5: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை நிலவரப்படி 78.74அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,266 கனஅடி வீதம் தண்ணீர் வந்துக் கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,011 கனஅடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படவில்லை.

---

தினமலர்

## கோடைவெயில் கலப்பின மாடுகளையே அதிகம் பாதிக்கும்

பதிவு செய்த நாள் : மே 06,2012,01:17 IST

கோவை:""கறவை மாடுகளுக்கு, சரியான கொட்டகை மற்றும் சுற்றுச்சூழலை ஏற்படுத்துவதன் மூலம், கோடை காலங்களில் ஏற்படும் உற்பத்தி மற்றும் இனப்பெருக்க குறைபாடுகளை நீக்கி, சீரான உற்பத்தியடையலாம்,'' என, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை தெரிவித்துள்ளது.தற்போது, கோடை

வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. மற்ற விலங்குகளை காட்டிலும், கோடை வெயிலானது, கறவை மாடுகளில் அதிக அழற்சியை ஏற்படுத்துகிறது. பிரீசியன் மற்றும் ஜெர்சி கலப்பின மாடுகள், இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறது. கலப்பின பசுக்களின் பால் உற்பத்தி, தரம் ஆகியவற்றை பாதிப்பதோடு, கறவை மாடுகளின் இனவிருத்தியையும் வெகுவாக பாதிக்கிறது; நோய் எதிர்ப்பு திறனையும் பாதிக்கிறது.இந்தியாவின் மொத்த பால் உற்பத்தியில், 55 சதவீதம் எருமை மாடுகளிலிருந்தும், 50 சதவீதம் நாட்டினம் (25 சதவீதம்) மற்றும் கலப்பின பசுக்களில் (25 சதவீதம்) இருந்தும் பெறப்படுகிறது. இதற்கு நேர்மாறாக, தமிழ்நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் (ஐந்து மில்லியன் டன்), 70சதவீதத்துக்கும் மேலாக கலப்பின பசுக்களில் இருந்தே பெறப்படுகிறது. எனவே, கறவை மாடுகளின் கோடைகாலப் பராமரிப்பு முறைகள் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.பாலின் அளவு, கொழுப்பு மற்றும் கொழுப்பற்ற இதர திடப்பொருட்களின் அளவும் கோடையில் குறைந்து விடுவதால், உற்பத்தி செலவு அதிகரித்து லாபம் குறைந்து விடுகிறது. கன்று ஈன்ற கறவை மாடுகள் சரியான இடைவெளியில் (21 நாட்களுக்கு ஒருமுறை) சினைப் பருவத்துக்கு வருவதில்லை; அப்படியே வந்தாலும் வெளிப்புறச்சினைப்பருவ அறிகுறிகள் காட்டுவதில்லை. இதனால், கறவை மாடுகளில், இனப்பெருக்க விகிதம் குறைகிறது.கோடை காலங்களில் கறவை மாடுகளுக்கு, சரியானளவு இடவசதி அளிக்க வேண்டும். கலப்பின பசுக்களுக்கு, கொட்டகையில் 4-5 சதுர மீட்டர் இடவசதி அவசியமாகும். கொட்டகையை சுற்றி நிழல் தரும் மரங்கள் வளர்ப்பதன் மூலம், வெப்பத்தின் அளவை குறைக்கலாம். கூரையை அலுமினியத் தகடுகளால் அமைத்து, உட்புறம் கருப்பு மற்றும் வெளிப்புறத்தில் வெள்ளை வர்ணம் அடித்தால்மாடுகள் வெப்ப அழற்சியின்றி ஆரோக்யமாக இருக்கும்.ஓடு மற்றும் "அஸ்பெஸ்டாஸ்' போன்றவற்றால் ஆன கூரையாக இருப்பின், அவற்றின் மேல் தென்னை, பனை ஓலைகள் அல்லது உலர்ந்த புற்கள் ஆகியவற்றை பரப்பி விடலாம். கோடை வெப்பத்தின் தாக்குதலை குறைக்க, மாடுகளின் கொட்டகை நீளவாக்கில், கிழக்கு மேற்காக அமைக்க வேண்டும். மாடுகளின் கொட்டகையினுள், காற்றோட்டத்தை அதிகரிக்கும் விதமாக கூரைப்பகுதியிலும், காற்றோட்ட வசதி செய்யலாம்.இத்தகவலை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை விரிவாக்கக் கல்வி இயக்குனர் கதிரேசன் தெரிவித்தார்.

---

**மக்காச்சோளம் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 07,2012,01:29 IST

பொங்கலூர்: அறுவடை சீசன் முடியும் தருவாயில், மக்காச்சோளம் விலை சரிவடைந்திருப்பதால், விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர்.பொங்கலூர் பகுதியில் வெங்காயம், மஞ்சளுக்கு அடுத்து கணிச மான அளவில் மக்காச்சோளம் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்த தை பட்டத்தில், நூற்றுக்கணக்கான ஏக்கரில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது, அறுவடை சீசன் முடியும் தருவாயில் உள்ளது.வைகாசி பட்டம் துவங்குவதற்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், விவசாயிகள் அடுத்த போக சாகுபடிக்கான பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். மார்க் கெட்டுக்கு மக்காச்சோளம் வரத்து குறைந்துள்ள போதிலும், விலை சரிந்துள்ளது, விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.இரண்டு நாட்களுக்கு முன்பு வரை, ஒரு குவிண்டால் மக்காச்சோளம் 1,150 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது, குவிண்டாலுக்கு 50 ரூபாய் விலை சரிந்து 1,100க்கு விற்பனையாகிறது. வியாபாரிகள் விலையை குறைத்துக் கேட்பதால், விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர்.

---

தினகரன்

மைக்கேல்பட்டியில் உழவர் பெருவிழா

திருக்காட்டுப்பள்ளி திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள மைக்கேல்பட்டியில் உழவர் பெரு விழா ஊராட்சி தலைவர் ஜெயராஜ் தலைமையில் நடந்தது.

பூதலூர் வேளாண் உதவி இயக்குனர் முருக வேல் முன்னிலை வகித் தார். கால் நடை மருத்துவ பல்கலைக்கழக உதவி பேராசிரியர் ரங்கநாதன் பேசினார். உளு ந்து பயி ருக்கு எக்டேருக்கு ரூ.250 மானியத்தில் இலைவழி உரமாக அளிக்க 25 கிலோ டி.ஏ.பி. உரம் உள்ளிட்ட நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன. கால் நடை மருத்துவர் பாஸ் கர்,

வேளாண் உதவி அலுவலர்கள் கோபிநாதன், உமா பிரியா, வசந்த், அட்மா திட்ட தொழில்நுட்ப அலுவலர்கள் மேனகா, சங்கீதா, ஆரோக்யசாமி, மகாலிங் கம், ராஜூப்பிள்ளை கலந்து கொண்டனர். ஊராட்சி துணைத்தலைவர் சத்தியா நன்றி கூறினார். ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர் பெரியராஜ் செய்திருந்தார்.

---

ஊறுகாய் நிறுவனங்களுக்கு தினசரி 30 டன் மாங்காய்

நங்கவள்ளி: நங்கவள்ளி பகுதியில் மாங்காய் அறுவடை மும்முரமாக நடந்து வருவதால் இங்கிருந்து தினசரி 30 டன் மாங்காய், ஊறுகாய் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

சேலத்தில் விளையும் மாம்பழங்களுக்கு தனிச்சுவை உண்டு. இதுபோல சேலம் மாங்காய்கள் மூலம் தயாரிக்கும் ஊறுகாய்க்கும் சுவை அதிகம். இதனால் ஊறுகாய் தயாரிப்பு நிறுவனங்கள் சேலம் மாங்காய்களை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

சேலம் மாவட்டம் நங்கவள்ளி ஒன்றியத்திற்கு உட்பட்ட வனவாசி, பெரியசோரகை, சின்னசோரகை, சூரப்பள்ளி, வீரக்கல் உள்ளிட்ட இடங்களில் சுமார் ஆயிரம் ஏக்கரில் மாந்தோப்புகள் உள்ளன. இதில் பெங்களூரா, செந்தூரா ரக 'மா' மரங்கள் அதிகம் உள்ளன.

பெங்களூரா ரக மாங்காய் அறுவடை தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. சென்னை, மதுரை, திருப்பூர், ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள ஊறுகாய் தயாரிப்பு நிறுவனங்கள் நங்கவள்ளி பகுதி மாங்காய்களை விரும்பி வாங்கிச் செல்கின்றன. இதற்காக இப்பகுதியிலிருந்து தினமும் சுமார் 30 டன் மாங்காய்கள் அனுப்பி வைக்கப்படுகிறது. மாங்காய் ஒரு கிலோ ஸி12க்கு விற்கப்படுகிறது.

நங்கவள்ளி ஒன்றியத்தில் தற்போது மாங்காய் அறுவடை மும்முரமாக நடந்து வருகிறது. இப்பகுதி விவசாயிகள் தொடர்ந்து மாம்பழங்களையும் பல்வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். மாமரத்தில் 'பூ' மற்றும் பிஞ்சு

பிடிக்கும் பருவத்தில் போதிய மழை இல்லாததால் விளைச்சல் குறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

---

வெள்ளி சந்தையில் உழவர் திருவிழா

பாலக்கோடு: காரிமங்கலம் வெள்ளிசந்தையில் உழவர் பெருவிழா நடந்தது. பிக்கனஅள்ளி ஊராட்சி தலைவர் ஆனந்தி முருகன் முன்னிலை வகித்தார். வேளாண்துறை, தோட்டக்கலைதுறை, மீன்வளத்துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடைத்துறை, சார்பில் மானிய விபரங்களை தெரிவித்தனர். மண் மாதிரி சேகரித்தல், மரவள்ளி விதை நேர்த்தி, மஞ்சள் கிழங்கு விதை நேர்த்தி ஆகியன குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. கலைநிகழ்ச்சிகள் மூலம் திட்டங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை உதவி அலுவலர்கள் தோட்டக்கலை உதவி இயக்குனர் தீபா, வேளாண்மை பொறியாளர் சுப்ரமணி, துணை அலுவலர் ராமநாதன், உதவி மீன் வள ஆய்வாளர் கதிர்வேல், கால்டை மருத்துவர் கணேசன் ஆகியோர் செய்திருந்தனர்.

---

சிறுவாணி நீர் மட்டம் சரிவு

கோவை: சிறுவாணி நீர் மட்டம் சரிந்து விட்டது. இன்னும் ஒரு மாதத்திற்கு குடிநீர் விநியோகத்தை சமாளிக்க முடியும்.

சிறுவாணி அணையின் நீர் மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. அணையின் மொத்த நீர் மட்ட உயரம் 15 மீட்டர். அணையின் நீர் மட்டம் 10.70 மீட்டர் அளவிற்கு சரிந்து விட்டது. தற்போது 4.30 மீட்டர் உயரத்திற்கு மட்டுமே குடிநீர் இருக்கிறது. அணையின் கடைசி வால்வு மூலமாக குடிநீர் பெறப்பட்டு வருகிறது. அணையின் நீர் மட்டம் மேலும் ஒரு மீட்டர் அளவிற்கு குறைந்து விட்டால் ‘டெத் ஸ்டோரேஜ்’ என்ற

இறுதி கட்ட இருப்பு நிலையை எட்டி விடும். அதற்கு பிறகு, குடிநீரை அதிகளவு வேகமாக எடுக்க முடியாது.
கடந்த 3 ஆண்டுகளுடன் ஒப்பிட்டால் அணை நீர் மட்டம் 1 முதல் ஒன்றரை மீட்டர் அளவிற்கு கூடுதலாகவே இருக்கிறது. ஆனால் கடந்த 3 ஆண்டுகளில் பருவ மழை உரிய காலத்தில் பெய்ய துவங்கியது.
மேலும், கோடை மழையும் அவ்வப்போது பெய்தது. தற்போது அக்னி நட்சத்திர சீசன் துவங்கியுள்ளது. அணைப்பகுதியில் மொத்த நீரில் 5 சதவீதம் வெப்பம் காரணமாக ஆவியாக செல்வதாகவும், நிலத்தடியில் நீர் உறிஞ்சப்படுவதாகவும் குடிநீர் வடிகால் வாரியத்தினர் தெரிவித்துள்ளனர். நீர் தேக்க பரப்பளவு 4 மடங்கு சுருங்கி விட்டது. தினமும் 8 கோடி லிட்டர் அளவிற்கு குடிநீர் பெறப்படுகிறது. வரும் ஜூன் முதல் வாரத்தில் தென்மேற்கு பருவமழை துவங்கி விடும். எனவே குடிநீர் பற்றாக்குறை வர வாய்ப்பில்லை. மழை பெய்ய தாமதம் ஏற்பட்டாலும் கூடுதலாக மேலும் ஒரு வாரம் சமாளிக்க முடியும்.
குடிநீர் அளவு குறைக்கப்படமாட்டாது. பில்லூர் அணையில் குடிநீர் இருப்பு அதிகமாகவே இருக்கிறது. அங்கேயிருந்து தேவையான அளவு குடிநீர் தடையின்றி பெற முடியும். எனவே கோவை நகருக்கு குடிநீர் பற்றாக்குறை பிரச்னை இருக்காது என குடிநீர் வடிகால் வாரியத்தினர் உறுதியளித்துள்ளனர். கோடை வெயில் காரணமாக குடிநீர் தேவை வழக்கத்தை விட அதிகமாக இருக்கிறது.
குடிநீர் வினியோகிப்பதில் உள்ள குறைபாடுகளை சரிசெய்தாலே குடிநீர் பற்றாக்குறையை தீர்க்க முடியும் என குடிநீர் வடிகால் வாரியத்தினர் தெரிவித்துள்ளனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## கூடலூரில் சுற்றுலா பயணிகளை ஈர்த்த வாசனை திரவிய கண்காட்சி

## கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தொடங்கி வைத்தார்

கூடலூர்,மே.7–
கூடலூரில் சுற்றுலா பயணிகளை கவர்ந்த வாசனை திரவிய கண்காட்சியை மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தொடங்கி வைத்தார்.



கண்காட்சியை கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தொடங்கி வைத்து வாசனை திரவிய பொருட்களால் செய்யப்பட்ட ஜார்ஜ் கோட்டை மாதிரியை பார்வையிட்ட போது எடுத்த படம்.

வாசனை திரவிய கண்காட்சி

நீலகிரி மாவட்டம் ஊட்டி, குன்னூர், கோத்தகிரியில் ஆண்டுதோறும் மே மாதம் கோடை விழா நடைபெற்று வருகிறது. இதையொட்டி வாசனை திரவிய கண்காட்சி கூடலூர் செயின்ட் தாமஸ் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் நேற்று தொடங்கியது. கண்காட்சி தொடக்க விழா ஊர்வலம் கூடலூர் நகராட்சி அலுவலகம் முன்பு தொடங்கியது. ஊர்வலத்தை மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். முக்கிய வீதிகள் வழியாக கண்காட்சி மைதானத்தை வந்தடைந்தது.

பின்னர் தோட்டக்கலை துறை சார்பில் வாசனை திரவிய பொருட்களால் செய்யப்பட்டு இருந்த தமிழக செயின்ட் ஜார்ஜ் கோட்டை மாதிரியை மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் திறந்து வைத்து பார்வையிட்டார். அதனை தொடர்ந்து சுற்றுலா துறை, வனத்துறை, ஆவின் உள்பட பல்வேறு துறை சார்பில் அமைக்கப்பட்டு இருந்த கண்காட்சி அரங்கினை கலெக்டர் திறந்து வைத்தார்.

*தோட்டக்கலை துறை, வனத்துறை சார்பில் அமைத்திருந்த கண்காட்சி அனைவரையும் வெகுவாக கவர்ந்தது.*

*கலைநிகழ்ச்சிகள், இன்னிசை விருந்து*

*பின்னர் மாலை 5 மணிக்கு கவியரங்கம், விழிப்புணர்வு நாடகம், கிராமிய நடனங்கள் உள்பட பல்வேறு கலைநிகழ்ச்சிகளும், இரவு இன்னிசை கச்சேரியும் நடைபெற்றது. இதில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.*

*இன்று (திங்கட்கிழமை) காலை 10 மணி முதல் கண்காட்சி மற்றும் கோடை விழா கலைநிகழ்ச்சிகள், இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. பின்னர் நிறைவு விழா நடக்கிறது. இதில் சிறந்த கண்காட்சி அரங்கு அமைத்த துறையினருக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளன. இதற்கான ஏற்பாடுகளை ஆர்.டி.ஓ. ஆதிமூலம், தாசில்தார்கள் மணி, பழனிக்குமார் உள்பட அரசு அதிகாரிகள் செய்து வருகின்றனர்.*

---